Grams: FARMVAR
Telex : 855-8360 TNAU IN
Email : bioenergy@tnau.ac.in

Phone : 091-0422-6611276
Fax :091-0422-6611455
Email : spugals@gmail.com

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்**
**உயிர் சக்தி துறை, கோயமுத்தூர் - 641 003**

முனைவர்.சு.புகழேந்தி
பேராசிரியர் மற்றும் தலைவர்

**எண். உசது /சுழற்சாவி முகவர்கள் மற்றும் சாண எரிவாயு திறன் மேம்பாட்டு பயிற்சி விவரங்கள் /2018**

**நாள்: 28.09.2018**

அன்புடையீர்,

பொருள்: உயிர் சக்தி துறை – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் – சுழற்சாவி முகவர்கள் மற்றும் சாண எரிவாயு திறன் மேம்பாட்டு – பயிற்சி விவரங்கள் – சம்பந்தமாக.

*****

**வணக்கம்.**

இன்றைய சூழ்நிலையில் புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தியின் உற்பத்தி பெருக்கம் மற்றும் மாசற்ற முறையில் எரிபொருளை உற்பத்தி செய்வது என்பது இன்றியமையாதது. இந்த நோக்குடன், புதுடில்லியில் உள்ள புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் நிதியுதவியுடன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள உயிர்சக்தி துறையில், சாண எரிவாயு மேம்பாடு மற்றும் பயிற்சி மையத்தின் கீழ் 2018 – 19-ம் ஆண்டிற்கான பயிற்சிகள் நடைபெற உள்ளன. நவம்பர் மாதம் நடைபெற உள்ள இப்பயிற்சி, கலந்து கொள்பவர்களுக்கு சுய தொழில் முனையவும் மற்றும் ஊரக வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் ஏதுவாக அமையும்.

**பயிற்சி விவரங்கள்**

1. **சுழற்சாவி முகவர்களுக்கான பயிற்சி:**

| | |
|---|---|
| **தகுதி** | : வேளாண்மையில் பட்டயபடிப்பு மற்றும் இதர பட்டயப்படிப்பு முடித்த அல்லது வேலையில்லா பட்டதாரிகள் |
| **பயிற்சிகாலம்** | : 15 நாட்கள் |
| **சலுகைப்படிகள்** | : ரூ.300/நாள் மற்றும் அசல் பயணப்படி ரூ.700-க்கு மிகாமல் வழங்கப்படும் |

2. **சாண எரிவாயு திறன் மேம்பாட்டு பயிற்சி :**

| | |
|---|---|
| **தகுதி** | : விவசாயிகள் அல்லது பெண் தொழில் முனைவோர்கள் |
| **பயிற்சிகான பருவம்** | : 10 நாட்கள் |
| **சலுகைப்படிகள்** | : ரூ.250/நாள் |

தகுதியான நபர்களை தேர்வு செய்து 31.10.2018-குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முனைவர்.சு.புகழேந்தி,
திட்ட ஒருங்கிணைப்பாளர்,
உயிர்சக்தி துறை, வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர் - 641 003
மின் அஞ்சல் : bioenergy@tnau.ac.in
தொலைபேசி : 0422-6611276

திட்ட ஒருங்கிணைப்பாளர்
பேராசிரியர் மற்றும் தலைவர்
உயிர்சக்தி துறை